செ.வெ.எண்: 33 நாள்: 24.04.2017

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் மத்தியரசின் அங்கமான **TRAI (Telecom Regulatory Authority of India)** வழங்கியுள்ளது. இதனால் அனைத்து கேபிள் இணைப்புதாரர்களுக்கும் செட்டாபாக்ஸ் வழங்கப்படவுள்ளது இந்நிலையில் அரியலூர் மாவட்டத்தில் 312 உள்ளுர் ஆபரேட்டர்களிடம் ரூ.1,79,11,147/- நிலுவையாக உள்ளது. இதை தவிர மாதாந்திர கட்டண தொகையும் சில உள்ளுர் கேபிள் ஆபரேட்டர்களை தவிர பிறர் நடப்பு மாதத்திற்குள் செலுத்துவதை காலதாமதம் செய்துவருகின்றனர்.

எனவே, அரியலூர் மாவட்டத்தில் உள்ள கேபிள் ஆபரேட்டர்கள் அவர்களிடம் உள்ள நிலுவைத்தொகையில் பாதியினை 31.04.2017க்குள்ளாகவும், மீதிபாதி தொகையினை 15.05.2017-க்குள்ளாகவும், நடப்பு தொகையினை பிரதி மாதம் 15-ம் தேதிக்குள்ளாகவும் அரசு கணக்கில் செலுத்தினால்தான் டிஜிட்டர் இணைப்பும், செட்டாபாக்சும் வழங்கப்படும் எனவும் தவறும் பட்சத்தில் ஏற்கனவே உள்ள இணைப்பும் துண்டிக்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.